தமிழ்நாடு அரசு

சுருக்கம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்பு பிரிவு – உறுப்புநலன் குன்றியோர் (மாற்றுத் திறனாளிகள்) – வேலைவாய்ப்பு அலுவலக பதிவு புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்களித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி.2) துறை

அரசாணை (நிலை) எண்.167

நாள் : 01.09.2010
ஆவணி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்க:-

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடித எண். ப.ப.1/1543/2010, நாள்.19.02.2010 மற்றும் நாள்.31.3.2010

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட தமது கடிதங்களில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், தேசிய வேலைவாய்ப்புப் பணி நடைமுறை நூலில் கண் பார்வையற்றோர், செவிப்புலன் இழந்தோர் மற்றும் வாய் பேசாதோர் (மாற்றுத் திறனாளிகள்) ஆகியோர்களுக்கு அவர்களது வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்காதிருப்பின் பதிவினைப் புதுப்பிக்கும் வகையில் நினைவூட்டு அனுப்பப்பட வேண்டும் என்ற வரையறைகள் உள்ளன எனவும், இருப்பினும், 1986-இல் ஆணையரகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உடல் ஊனமுற்ற, கண் பார்வையற்றோர், செவிப்புலன் இழந்தோர் மற்றும் வாய் பேசாதோர் (மாற்றுத் திறனாளிகள்) ஆகியோர்கள் பதிவுப் புதுப்பித்தல் செய்வதில், அவர்களுக்கு ஏற்படும் இடையூறுகள் குறித்து விவாதிக்கப்பட்டு உடல் ஊனமுற்றவர், கண் பார்வையற்றோர், செவிப்புலன் இழந்தோர் மற்றும் வாய் பேசாதோர் (மாற்றுத் திறனாளிகள்) ஆகியோர்கள் தங்களது எண்ணங்களை வெளிப்படுத்துவதில் உள்ள சிரமங்களையும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை உரிய காலத்தில் புதுப்பிப்பதில் உள்ள பிரச்சனைகளையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலக பதிவு புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டு துறையளவில் ஆணைகள் வழங்கப்பட்டன எனவும், இதே போன்று 1999-ம் வருடம் மனநலம் குன்றிய பதிவுதாரர்கள் புதுப்பித்தல் மாதத்தை நினைவில் வைத்துக் கொள்வதும், புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அனுப்பப்படும் நினைவூட்டுகளுக்குப் பதில் அனுப்புவதும் மிகவும் சிரமத்திற்குரியதாக இருக்கும் என்று கருதப்பட்டு உடல் ஊனமுற்றவர், கண் பார்வையற்றோர், செவிப்புலன் இழந்தோர் மற்றும் வாய் பேசாதோர் (மாற்றுத் திறனாளிகள்) ஆகிய வகையினரின் ஊனத்தின் அளவைவிட மனநலம் குன்றியவர்களின் ஊனத்தின் அளவு மிக அதிகம் என்றும், ஊனத்தின் தன்மையும் முற்றிலும் வேறானதென்று கருதப்பட்டு மனநலம் குன்றியவர்களுக்கு ( Mentally Retarded ) பதிவைப் புதுப்பிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டு, துறையளவில் ஆணைகள் வழங்கப்பட்டன எனவும், தற்போது வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள உறுப்புநலன் குன்றியோர் (மாற்றுத் திறனாளிகள்) தங்களது வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினைப் புதுப்பித்தலில் ஏற்படும் சிரமங்களைக் கருத்தில் கொண்டும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் "கணினி ஒருங்கிணைப்புத் திட்டம்" நடைமுறைப்படுத்தும் நிலையில் ஒரே சீரான நடைமுறையை அனைத்து ஊனமுற்ற (மாற்றுத் திறனாளி) பதிவுதாரர்களுக்கான புதுப்பித்தலில் கடைப்பிடிக்க ஏதுவாக உடல் ஊனமுற்றோருக்கும் (மாற்றுத்திறனாளிகள் ( Orthopaedically Handicapped ) வேலைவாய்ப்பு அலுவலக பதிவினைப் புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்களிக்கலாம் எனவும் தெரிவித்து, இது குறித்து உரிய அரசாணை வழங்குமாறு வேண்டியுள்ளார்.

2) மேலே பத்தி 1ல் கண்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து, அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு புதுப்பித்தல் செய்வதிலிருந்து விலக்களிக்கலாம். என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

த. பிரபாகர ராவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை.32.
அனைத்துத் துறைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை.9

நகல்

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை.9
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை.9
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு-11)த் துறை, சென்னை.9
"கணினி" பிரிவு பொறுப்பாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை.9
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை.9
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை.9
இருப்புக் கோப்பு / சுத்தநகல் கோப்புக்கு / உதிரி நகல்கள்.

// உண்மை நகல் //

[signature] 6/10/10
இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்

ஜி.வி.4.10.

[signature] 6/10/10